செ.கு.எண்:-264 நாள்:- 17.12.2011.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

**அறிக்கை – 17.12.2011**

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம், வேங்கைவாசல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பக்தவச்சலம் என்பவரின் மகன் திரு. ரமேஷ் என்பவர் மீது 16.12.2011 அன்று மணல் ஏற்றிக் கொண்டு வந்த லாரி மோதியதில் திரு. ரமேஷ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. ரமேஷ் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் இரண்டு பேர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இருவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் காலமான திரு. ரமேஷ் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வரும் நாராயணன் மற்றும் தனசேகரன் ஆகியோருக்கு தலா 25,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்